RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் - “குறிஞ்சித் தேன்” நாவலில் படகர் இன மக்களின் சமூகக் கட்டமைப்பு

**த. தங்கசெல்வி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம், தமிழ்நாடு, இந்தியா

# The Social Structure of the Badaga Community in Rajam Krishnan’s Kurinjithen

**T. Thanga Selvi [a, *]**

[a] Department of Tamil, Rajapalayam Rajus' College, Rajapalayam-626117, Tamil Nadu, India

* Corresponding Author:
selvi11041988@gmail.com

Received: 07-12-2025
Revised: 28-02-2026
Accepted: 08-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Social structure is shaped by the customs, cultural practices, economic conditions, and value systems of a community. Rajam Krishnan’s *Kurinjithen* offers a significant literary representation of the social life and cultural identity of the Badaga community of the Nilgiris. This study examines the social structure of the Badagas as portrayed in the novel, with particular attention to communal solidarity, family relationships, education, occupation, economic transformation, moral values, and cultural continuity. The novel presents the village as an extended family in which collective responsibility and mutual support constitute important aspects of community life. It also depicts a gradual transformation in attitudes towards education: a community that once viewed formal education as unnecessary increasingly recognizes its significance for the younger generation in response to changing socio-economic conditions. Agriculture, traditionally central to Badaga life, undergoes transformation with the increasing cultivation of commercial crops such as tea and coffee, reflecting the community’s adaptation to economic change. At the same time, traditional cultural values remain significant, particularly through practices associated with family unity, temple service, discipline, ethical conduct, and social harmony. The study argues that *Kurinjithen* portrays the Badaga community as negotiating between tradition and modernity while sustaining its collective identity and cultural values. Thus, Rajam Krishnan’s novel serves as an important literary document for understanding the changing social, cultural, and economic structures of the Badaga community.

**Keywords:** Kurinjithen, Badaga community, Rajam Krishnan, Family Relationships

## முன்னுரை

தனிநபர்கள் ஒன்றாக இணைந்து குடும்பமாகி சமூகமாக உருவெடுக்கின்றனர். பல குடும்பங்கள் சேர்ந்து சமூகமாக மலரும். ஒவ்வொரு சமூகத்துள்ளும் ஒவ்வொரு பண்பாடுகள், கலாச்சாரங்கள். வேறுபட்ட கட்டமைப்புகள் காணப்படுகின்றன. அந்தக் கட்டமைப்புகளே பண்பாடாக, கலாச்சாரமாக மாறும். இதிலும் நாட்டுப்புறத்தான் என்று அழைக்கப்படும் மக்கள், மலைசார் மக்கள் இவர்களுக்குள்ளும் சமூக கட்டமைப்புகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. “குறிஞ்சித் தேன்” நாவலில் நீலகிரியில் படகர் இன மக்களின் சமூக வாழ்வியல் மிகவும் போற்றத்தக்க வகையில் காணப்பட்டாலும் போராட்ட களமாகவும் உள்ளதை இராஜம் கிருஷ்ணன் எடுத்துரைக்கின்றார். அவர்கள் தங்கள் இனத்திற்கென்று ஒரு கட்டமைப்பை வைத்துள்ளனர். இங்கு சமூகமே குடும்பமாக வாழும் நிலையினையும் அதற்காக அவர்கள் செய்யும் தியாகங்களையும் இராஜம் கிருஷ்ணன் குறிஞ்சித் தேன்

என்னும் நாவல் எடுத்துரைக்கின்றது. படகர் இன மக்களின் சமூகக் கட்டமைப்பையும் அதன் வழி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முறையையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமூகம் - விளக்கம்

"ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். மக்கள் ஒன்று கூடி கூட்டமாக வாழும் தொகுதி சமுதாயம் எனப்படும். மக்கள் அனைவரும் ஒன்று கூடி ஒத்த கருத்துடையவர்களாக ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும்" என்றும், "மனிதனுக்கு சமூக இயல்பு (Sociality) இயற்கையிலேயே இருக்கிறது. அதன் காரணமாக அவன் பிறரோடு கூடிப் பழகுகின்றான். அப்படிப் பழகும் போது சமூகம் தோன்றுகின்றது" என்று அரிஸ்டாட்டிஸ் எடுத்துரைப்பதாக வாழ்வியல் களஞ்சியம் கூறுகின்றது. "ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்" என்று கலைக்களஞ்சியம் சமூகத்திற்கு விளக்கம் தருகின்றது.

"மரபு வழிப்பட்ட பண்பு நலன்கள், உணர்வுகள் உடலமைப்பு ஆகியவை ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்றன." சமூகம் என்பது உயிர் வாழ்வதற்காகப் போராடும் நம் மக்களினத்தின் தனித்தன்மையுள்ள ஒரு குழுவாகும். தமக்குத்தாமே அமைத்துக் கொண்டே அக்குழுவின் தலைவிதியையே அக்குழுவைச் சார்ந்த ஒவ்வொரு தனிமனிதனும் பெற்றிருக்கின்றான். இவ்வமைப்பில் குழந்தையிலிருந்து முதுமை வரையில் மனிதர்கள் மற்றவரைச் சார்ந்தும் மற்றவரின் கூட்டுறவோடும் வாழ வேண்டியவர்களாகியுள்ளனர். இதிலிருந்து சமூகம் என்பது ஒருவரோடு ஒருவர் கூடிப்பழகி பின் ஒன்றாக வாழ்கின்ற மக்கள் கூட்டமாகும். உயிர் வாழ்வதற்காகவும், குழுவின் தலைவிதியையே மாற்றும் வல்லமையும் சமூகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது." என்று கு.வெ.பாலசுப்பிரமணியன் எடுத்துரைக்கின்றார்.

சமூகம் என்பது மக்கள் தொகுதி என்பதையும், கூட்டமாக வாழ்ந்து தங்களின் தனிப்பட்ட மரபுகளை வெளிக்காட்டுபர்களாக இவர்கள் இருக்கின்றனர் என்பதையும், பண்பாடு, பழக்க வழக்கங்கள் சமூகத்தோடு தொடர்புடையவையே என்பதையும் தெரிந்து கொள்ள முடிகின்றது.

## படகர் இன மக்களின் பூர்விகமும் - பிரிவும்

படகர்கள் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு மைசூரிலிருந்து பண்டிப்பூர் வழியாக காடுகளின் வழியே நீலகரி மலைக்கு வந்து குடியேறியவர்கள். அவரவர் செய்யும் தொழிலுக்கு ஏற்ப சில பிரிவுகளும் உண்டு. "ஹரிவர், உடையார், அதிகாரி, கணக்கர், படகர், தொரியர் என்ற முறையே, குருமார்களாகவும் அதிகாரிகளாகவும் கணக்கர்களாகவும் இருந்தனர் என்றும் கூறுவர். தொரியர் என்ற பிரிவினர், மற்ற பிரிவிருக்குப் பணிபுரியும் மக்களாக ஒவ்வொரு ஹட்டியிலும் குடியிருந்தனர். பணி புரிபவர் என்ற முறையில் இருந்தாலும் உயர்ந்தவராகக் கருதப்பட்ட மக்களுக்குப் பிள்ளைகள் போன்ற உறவுடையவராகவே தொரியர் கருதப்பட்டு வந்தனர்." ஹட்டி என்றால் குடியிருப்பு என்று பொருள். மரகதமலையோடு தொடர்புடைய குடியிருப்புகள் பக்கத்தில் அதிகம் இருக்கின்றன. என்ற அடிப்படைக் கருத்து படகர்களின் பூர்விகத்தை உணர்த்துகின்றது.

## குடும்பக் கட்டமைப்பு

குடும்பத்தை உருவாக்குபவர்கள் பெண்களே. "குடும்பம் தலைமுறை தலைமுறையாகப் பண்பாட்டு மரபுரிமையைக் கொண்டு செல்லும் ஒரு செயல்." "பொதுவாக தங்குமிடம், பொருளீட்டுதல், ஒத்துழைப்பு, சந்ததியைப் பெருக்கல் ஆகியவற்றைக் கொண்ட அமைப்புக்குக் குடும்பம் என்று பெயர்." (The family is every ware identifiable as a social group charactarised by common residence, economic co-operation and reproduction)" என்று என்சைக்ளோபீடியா எடுத்துரைக்கின்றது.

பெண்கள் ஆண்களுக்கு வலுசேர்க்கும் விதத்தில் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் அக்குடும்பம் நன்முறையில் வளரும். படுகர் இனப் பெண்கள் சில சிறப்புக்களோடு

இருப்பதாகவும், அவர்களை ஆண்கள் பாராட்டவேண்டும், மதித்தல் வேண்டும் என்ற கொள்கையை உடையவர்களாக லிங்கையா எண்ணுவதனை,

"குடும்பத்தில் ஒரு புதுப் பெண் வந்து புகுந்து, தலைவனையும் அவனுக்குரிய பூமியையும் உடைமைகளாகக் கொண்டு உழைத்து, அவனையும் சிறப்பித்து, அந்தக் குடும்பத்தின் வேர் நசித்து விடாதபடி, தளிர்த்துத் தழைக்க வைக்கிறாள்..... ஏவலரைப் போல் உழைத்து, உயர்ந்தவற்றை மக்களுக்கும் கணவனுக்கும் பகிர்ந்தளித்துவிட்டு மிகுதியாகும் "கொரளி" மாவைக்கூட உண்டு நிறைவெய்தும் படகைப் பெண்களின் சிறப்பைச் சொல்லி மாளுமோ? இத்தகைய பெண்களை மாணிக்கங்கள் என்று போற்றிப் பேண வேண்டியது ஆணின் கடமையன்றோ!" (கு.தே:ப:29)

என்றதன் வழி தெரிந்து கொள்ள முடிகின்றது.

இவர்கள் குடும்பம் என்ற அமைப்பு சிதைந்து விடாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணமுடையவர்கள். இராஜம் கிருஷ்ணன் இந்நாவலில் சமூகமே ஒரு குடும்பம் தான் என்பதை மிக உறுதியாக எடுத்துரைத்துள்ளார். வீடுகள் தான் வேறு. ஆனால் அனைவருமே ஒன்று தான். அதிலும் ஒரு குடும்பத்து ஆண் மக்களில் பிரிவு வரக் கூடாது என்பதை லிங்கையா என்ற பாத்திரத்திரத்தின் வழி இயம்பியுள்ளார். லிங்கையாவும், மாதண்ணனும் ஒரு தாய் வயிற்று பிள்ளைகள். மாதண்ணன் பொறுப்பில்லாமல் குடும்பத்தைக் கவனியாது இருக்கக் கூடியவன். ஆனால் லிங்கையா தன் அண்ணன் குடும்பத்தையும் சேர்த்தே கவனித்ததையும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளில் ஏற்ற இரக்கம் வேண்டாம் என்று தன் மனைவியிடம் இயம்புவதைப் பார்க்க முடிகின்றது.

"ஓர் அப்பனுக்குப் பிறந்து ஒன்றாக ஒட்டியிருந்த கிளை. ஒன்று வாட ஒன்று பார்ப்பது கேவலம் அவரவர் பாவம் அவரவர்க்கு" (கு.தே:ப:24)

என்று லிங்கையா தன் மனைவியிடமும்,

"நாம் வெவ்வேறு வீடுதானே ஒழிய, வெவ்வேறு குடும்பம் அல்ல. இதுவரையில் அப்படி நினைத்திருந்தாலும் இனியும் அப்படி நினைக்க வேண்டாம். என்னிடம் இருக்கிறது என்று நினைக்காதீர்கள். நம்மிடம் இருக்கிறதென்று சொல்லுங்கள்." (கு.தே:ப:42)

என்று தன் அண்ணியாக நஞ்சமாளிடமும் இயம்புவதிலிருந்து குடும்பம் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்தைப் பார்க்க முடிகின்றது.

ஊருக்குள் யார் வீட்டிலும் உணவு இல்லை என்ற பஞ்சம் இருக்காது. அதனைப் போக்குவதற்கு அந்த ஊரில் பெரியவரான கரியமல்லர் இருக்கின்றார். அவர்தான் அவ்வூர் மக்களுக்கு வறுமையைப் போக்க வழிகளைச் செய்பவராவார். தன் பூமியில் விளையும் கிழங்குகளையும், சாமையையும் எப்பொழுதும் பாதுகாத்து வைத்திருப்பவராக இருக்கின்றார். மேலும், இவர் மக்களுக்குள் பேதம் உண்டாகும் பொழுது அதனை நீக்குபவராகவும், தவறுகளைச் சரிசெய்பவராகவும் இருக்கின்றார். இதனை,

"ஊரில் ஒரு தவறும் முற்றிச் சச்சரவு உண்டாகாத படி, ஓர் அணைபோல் இருந்துவந்த அதிகாரி அவர். அவர் ஆணையில், அந்த மரகத மலையும், மணிக்கல் ஹட்டியும், அடுத்துச் சுற்றியுள்ள சின்னக் கொம்பை, கீழ்மலை முதலான குடியிருப்புக்களும் அடங்கி, அவர் வாக்குக்கு மதிப்பும் செல்வாக்கும் வைத்திருந்தன." (கு.தே:ப:44)

என்பதிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் எவ்விதத்திலும் பிரிவு நேரிடாதபடி பார்த்துக் கொள்வதில் கவனமாக இருக்கின்றனர்.

மேலும், தங்களின் உறவுக்குள் பிரிவு வந்துவிடக்கூடாது என்று மிகவும் கவனமாகச் செயல்படுகின்றனர். இரண்டு தலைமுறை பகையைத் தீர்ப்பதற்கு கரியமல்லரின் பேரனும், வக்கீலுமான கிருஷ்ணன் தன்னுடைய பேத்தியை ஜோகியின் மகனுக்கு மனமுடித்துக் கொடுக்கவேண்டும் என்று எட்டு வருடங்களுக்கு முன்பே எண்ணியதையும், அதையே நிறைவேற்றி குடும்ப ஒற்றுமையுடன் ஊர் ஒற்றமையையும் நிலைநாட்டியதிலிருந்து திருமண பந்தத்தின் மூலம் பகையை வென்ற நிலையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

## பொருளாதாரக் கட்டமைப்பு

ஒவ்வொரு குடும்பத்திற்குமே கொஞ்சம் பூமியாவது வைத்திருக்கின்றனர். அதில்தான் அவர்கள் உழைத்து பொருளாதாரத்தை சரிசெய்கின்றனர். பொருளாதாரத்தினை உயர்த்தவில்லை. ஆனால் தன்னிறைவான வாழ்வினை வாழ்ந்துள்ளனர். ஒவ்வொரு வீட்டிலும் எருமைகள் இருந்தன. பால் கறப்பதனை உயிரினும் மேலாக எண்ணி செயல்பட்டுள்ளனர். அதனால் தான் அவர்கள் வீட்டில் பால்மனை என்றொரு மனை இருக்கின்றது. அதில் பால் கறப்பதற்கான பொருள்கள் அங்கே இருக்கின்றன. பால் கறக்கச் செல்லும் முன் குளித்து விட்டு பாலினைக் கறப்பர். பாலினை எடுத்துச் செல்லுகையில் பெண்கள் எதிரில் வரக்கூடாது. ஆண் மகன் ஒரு குறிப்பிட்ட வயது வந்துவிட்டால் அவன் பால் கறப்பதற்கான நிகழ்வை சடங்காக நிகழ்த்துகின்றனர். பால் கறக்கும் பாத்திரமான "ஹொாணே"யில் பாத்திரத்தினை கறக்கக் கொடுப்பர்.

படகர் இன மக்கள் அனைவரும் வேளாண்மை செய்வதில் காவல் காப்பதில் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றனர். நிலத்தில் பொருளினை உற்பத்தி செய்யும் பொழுது கண்டிப்பாக பயிரினைக் காவல் காத்தல் வேண்டும். அவரவர் நிலங்களுக்கு தினமும் செல்ல முடியாததால் முறை வைத்து பாதுகாத்துள்ளனர். இதனால் விலங்குகளிடமிருந்து பயிரினைப் பாதுகாத்துக் கொள்ள முடிகின்றது. இதனை,

"இரவில் முள்ளம்பன்றிகள் கிழங்கினைத் தோண்டிப் போடும். மான்கள் தளிர்களைத் தின்றுவிடும். இரவுக்கு இருவர், கால்முறையாக, ஊதுகுழலும் தீயும் நாயுமாய்த் துணைகொண்டு அந்தப் பரணில் இருந்து நட்ட பயிரைப் பாதுகாப்பார்கள்." (கு.தே:ப:22)

என்றதன் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இவர்களின் சமுக கட்டமைப்பு என்பது நிலம், ஆடு, மாடு இவற்றை சுற்றியே பிணைந்துள்ளது.

## கல்விக் கட்டமைப்பு

மலைப்பகுதியில் வாழ்ந்து வருவதனால் கல்வி என்பதே பெருங்கனவாக இருக்கின்றது. கல்வியினால் மேம்பாடு அடைய முடியும் என்ற செய்தியை இராஜம் கிருஷ்ணன் இந்நாவலில் கிருஷ்ணன் என்ற பாத்திரத்தின் வழி படித்தால் உண்டாகும் நன்மையாக வருமானம், மரியாதை ஆகியவற்றை இம்மக்கள் நேரில் பார்த்தபின் தன்னுடைய மக்களையும் படிக்க வைக்க எண்ணுகின்றனர். ஆனாலும் கல்வி அவசியமில்லாதது என்று பலஇடங்களில் மூக்குமலை மாமா என்பவர் சொல்லுவதிலிருந்து படித்தால் குழந்தைகள் நம்மை விட்டு பிரிந்து சென்று விடுவர் என்ற பயத்தினையும் இங்கு ஆசிரியர் பதிவு செய்துள்ளார். ஆனால் பணம் முக்கியமாகப் படும்போதும் மரியாதை கிடைக்கும் நோக்கிலும் வசதி இல்லையாகிலும் எவ்வளவு தூரம் சென்றாகிலும் படிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பெற்றோர்களும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் இருக்கின்றனர். குழந்தைகளுக்கும் அவ்வாறான மனநிலையே உண்டாகின்றது. எப்படியேனும் கல்வி கற்றுக் கொள்ளவேண்டும் என்ற நிலையில் ஜோகி என்பவரின் மகன் நஞ்சன் ஒரு நாளைக்கு பதினாறு மைல் தூரம் நடந்து சென்று படிக்கிற நிலையினை,

"நஞ்சன் மரகத மலைப் படிப்பை முடித்துவிட்டு, ஒத்தைக்கே சென்ற கொண்டிருந்தான். கல்விப் பசியைத் தீர்த்துக் கொள்ள, எட்டு மைல்கள், மேடு பள்ளம், காடு மலை என்று பாராமல் நடந்து சென்று கொண்டிருந்தான்." (கு.தே:ப:269)

என்பதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு படித்து கட்டடப் பொறியாளராக வேலையையும் பெற்றுவிட்டான். இப்படி அங்குள்ள மக்கள் அனைவருமே குழந்தைகள் படித்தால் பணம் காசு சம்பாதித்து நன்முறையில் வாழ்வர் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். அதே சமயம் படிக்காமல் கூலி வேலை செய்பவர்களாக ரங்கன் மக்கள் லிங்கன், தருமன் இருவரது நிலையினையும் எடுத்துரைத்துள்ளார். கல்வி ஒருவருக்கு இன்றியமையாதது என்பதைத் தெளிவாக்கியுள்ளார்.

## பண்பாட்டுக் கட்டமைப்பு

பண்பாடுகள் சமூகத்தோடு ஒன்றினைந்து இருக்கின்றது. இச்சமூகத்தில் ஒரு சில பண்பாட்டுக் கூறுகளை மிகவும் பக்தியோடும், அன்போடும் ஏற்று நடக்கின்றனர். கோயில் காரியங்களைச் செய்வதற்கும் ஊரினைக் காப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட காலம் இருத்தல் வேண்டும். இதற்கு நல்ல ஒழுக்கமுள்ள ஆண் பிள்ளை ஒருவரைத் தேர்தெடுத்து அவனை முறையாக அந்தக் காரியத்தை செய்ய ஊரார் நியமிப்பர். அப்பணியில் சிரத்தைகள் உண்டு. ஆனாலும் அதனை ஏற்றுக் கொண்டு இப்பணியினைச் செய்கின்றனர் அவ்வூர் ஆண்மக்கள்

"கோயிற் பணியின் கட்டுப்பாடுகளை அவன் ஓரளவு அறிவான். ஒரே முறை அவன் சமைத்து உண்ண வேண்டும். அதுவுங்கூடச் சட்டியை ஒரே ஒரு தரம் தான் கவிழ்க்க வேண்டும். எவ்வளவு விழுகிறதோ இலையில் அதையே உண்ண வேண்டும். கோயிலின் எல்லையைத் தாண்டிச் செல்லும் சுதந்திரம் கிடையாது. " (கு.தே:ப:49)

என்பதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. இதன் வழி ஒழுக்கத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காக இம்மாதிரி கடைப்பிடிக்கின்றனர் என்பதை தெரிந்து கொள்ள முடிகின்றது.

இவர்களின் பண்பாட்டில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. வீட்டில் யாரேனும் வந்து விட்டால், வீட்டின் தலைவனுக்கென்று உள்ள பெரிய தட்டில் உணவினை இட்டு நெய்வார்த்து தலைவன் எல்லாக் குழந்தைகளுக்கும் தன் கையால் உணவினைக் கொடுக்கும் வழக்கம் உள்ளது. இதன் வாயிலாக அக்குழந்தைகளுக்கு ஒற்றுமையை அவர்களறியாமலேயே உள்ளுக்குள் புகுத்துவதனைப் பார்க்க முடிகின்றது.

"குழந்தைகள் எல்லோரும் ரங்கம்மை உட்பட, சுற்றி உட்கார்ந்து விட்டனர். அம்மாதிரி அவன் உட்கார்ந்தால், குடும்பத் தலைவன் உணவு கொள்வதற்குரிய நேரம் இப்பொழுது என்பதே அதன் பொருள்."

"மாதி வட்டிலைக் கொண்டு வந்து வைத்து சாமைச் சோறும் மணக்க மணக்க நெய்யுமாக அமுது படைத்தாள். மொச்சைப் பருப்பின் புளியில்லாத குழம்பை ஊற்றினாள். சோற்றைக் கலந்து லிங்கையா குழுந்தைகளுக்கெல்லாம் கொடுத்தான். " (கு.தே:பக்:26 - 27)

என்றதன் வாயிலாகப் குடும்ப ஒற்றுமைக்கு வீட்டின் தலைவன் காரணமாக இருப்பதை பார்க்க முடிகின்றது.

குழந்தைகள் பெரியவர்களானதும் ஒன்றாக வாழ வேண்டும் என்ற கட்டுப்பாட்டை அவர்களாகவே வளர்த்துக் கொள்கின்றனர். ஒழுக்கத்தினைப் போற்றி வாழக்கூடியவர்களாக இருக்கின்றனர். ஒழுக்கமே உயர்வைத் தரும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

## சகோதரத்துவம்

மற்ற இனத்தாருடன் சகோதரத்துவத்துடன் இருக்கின்றனர். சகோதரத்துவம் மக்களை மகிழ்ச்சியாக வைக்கும். இதனை அறிந்த இவர்கள் ஒழுக்கத்தினை மேன்மையாகக் கருதுவதால் அனைவரிடமும் அன்புடன் இருக்கின்றனர்.

"மாதி தொதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மண்ணில் பாடுபடாதவர்கள் அவர்கள் மலையில் நாம் வந்து குடியிருக்கிறோமே என்ற காரணத்திற்காக, நாம் இன்னும் அறுவடைக்கு அறுவடை அவர்களுக்குத் தானியம் கொடுக்கிறோம். சட்டியம் பானையும் அரிவாளும் கொட்டும் ஈட்டியும் செய்து நமக்குத் தந்து, நம் வாழ்வுக்கும் சாவுக்கும் வந்து மேளமும் தாளமும் பாட்டும் அளிக்கும் கோத்தருக்கு நாம் தானியம் கொடுக்கிறோம். காட்டுக் குறும்பரிடம், மந்திரம் மாயம் என்று பயந்துகொண்டு அவர்கள் கேட்பதெல்லாம் கொடுக்கிறோம். மலையில் வாழும் மற்றவரிடமெல்லாம் சகோதர முறை கொண்டு வாழ்க்கையில்" வாழ்கின்றோம். (கு.தே:ப:44)

என்ற கூற்றுக்கள் மெய்ப்பிக்கின்றன. இதன் வழி மைசூரிலிருந்து இங்கே வாழ வந்தவர்களாக இருந்தாலும் மற்றவர்கள் தங்களைப் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டும் என்ற பகட்டுக்கு வாழாமல் இயல்பாக வாழ்ந்துள்ளமை புலனாகின்றது.

## முடிவுரை

நீலகிரி மலைப்பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் மைசூரிலிருந்து பண்டிப்பூர் வழியாக தமிழகம் வந்தவர்கள். இவ்வாறு வந்தவர்கள் பல வகையான பெயர்களைக் கொண்டவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களில் ஒருவரே படகர் மக்கள். இவர்கள் தங்களை ஒரு கட்டமைப்புக்குள் வைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளனர். முக்கியமாக குடும்பம் என்ற அமைப்பில் எந்த பிரிவும் இல்லாமல் வாழ வேண்டும் என்று அவர்களின் செய்கைகளின் வாயிலாக இளம் தலைமுறையினருக்கு மறைமுகமாக எடுத்துரைக்கின்றனர். பெண்களை பாராட்ட வேண்டும் என்றும், அவர்களே குடும்பத்தின் ஆணி வேராக இருக்கின்றனர் என்றும், பகைமை என்பது சமூகத்துக்குள் இருக்கவே கூடாது என்றும் உறுதியாக இருந்துள்ளனர். கல்வி வேண்டாம் என்று இருக்கும் இம்மக்கள் காலப்போக்கில் தங்களை அந்தக் கட்டமைப்பிலிருந்து விலக்கிக் கொண்டு கல்வி கற்று உயர் பதவியில் இருக்கின்றனர். பொருளாதாரம் குறையும் போது பணப்பயிரினை விளைவித்து தங்களைத் தற்காத்துக் கொண்டுள்ளர். பண்பாட்டில் மாற்றங்களை ஏற்காதவர்களாக இருந்து ஒற்றுமையாக வாழ வலியுறுத்துகின்றனர். மேலும், வேறு இன மக்களையும் தங்களின் சகோதரர்கள் போல் எண்ணி அவர்களிடம் நட்பு பாராட்டுகின்றனர். ஒழுக்கத்திலிருந்து தவறுதல் கூடாது என்பதில் கவனமாக இருந்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக கல்விக் கட்டமைப்பு, பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து மாறிய இவர்கள் தங்களின் குடும்பம், பண்பாடுகளிலிருந்து மாறாமல் இன்று வரை ஒற்றுமையாகவும், பகைமை பாராட்டாமல் இருக்கின்ற நிலையையும் இராஜம் கிருஷ்ணன் அவர்கள் குறிஞ்சித் தேனின் பதிவு செய்துள்ளார். இவர்களிடமிருந்து நாம் இத்தகைய கட்டமைப்புகளை எடுத்துக் கொண்டு வாழ வேண்டும். இதனை எடுத்துக் கொண்டு வாழ்ந்தால் வாழ்வு சிறக்கும் என்பதை இக்கட்டுரை வழி தெரிந்து கொள்ள முடிகின்றது.

## References

Rajam Krishnan, (2012) Kurinji Then, Pavai Publications, Chennai

Marai Malai, C.E. (1979) Introduction to Literary Criticism, Neelamalar Publishing House.

Balasubramanian, K.V. (1994) Social Structures in Sangam Literature, Tamil University, Thanjavur

Pascal Gisbert, J. Narayanan, (1964) Fundamental Principles of Sociology, Tamil Publishing Corporation, Chennai,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License